## ஹெலன்கோ ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனி – 2017

ஹெலன்கோ ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 விடயத்தின் மீதான அழுத்தம்

எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை முனைப்பழியுள்ளதாக்காமல், நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கையில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அனுமானம் தொடர்பான நிதிக்கூற்றுக்களுக்கான 2.5 ஆம் குறிப்பிற்கு எனது கவனத்தைச் செலுத்தியுள்ளேன். மேற்குறித்த குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு, கம்பனியின் பணிப்பாளர் சபை ஹம்பாந்தோட்டையிலுள்ள ஹோட்டல் நிர்மாணத்தினை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்திருந்ததுடன், 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், கென்வின் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (தாய் கம்பனி) இல் அதன் பங்குகளில் முதலீடு செய்துள்ள அவர்களின் விகிதாசாரத்தில் அதன் பங்குதாரர்களுக்கு கம்பனியின் பங்குகளினை மாற்றுவதற்கு பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு அதன் அறிவுறுத்தல்களினை வழங்கியிருந்தது. அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சுயாதீனமான விலை மதிப்பு செயன்முறையிலிருந்தமையினால், கம்பனியை பணமாக்குவதற்கு தீர்மானம் செய்ய முடியாதிருந்தமையினால், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட வேண்டியிருந்தது.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 பங்கு மூலதனமும் உரிமை மூலதனமும்

---

கம்பனியின் மிக நெருங்கிய பொறுப்பேற்கும் தலைமை மற்றும் கட்டுப்படுத்தும் நிறுவகமாக கென்வின் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் காணப்படுகின்றது. இறுதியான தாய்க் கம்பனி சிறிலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட் காணப்படுகின்றது. இரண்டு கம்பனிகளும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுக் காணப்படுகின்றதுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எல்எவ்ஆர்எஸ் / எல்கேஏஎஸ்) பிரகாரம் தாய்க் கம்பனியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 தொடர்ந்து செல்லும் தன்மை

---

ஹம்பாந்தோட்டையில் Haytt Regency ஹம்பாந்தோட்டை ஹோட்டலினை நிர்மாணித்து செயற்படுத்துவதற்கு 2011 திசெம்பர் 21 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. நிதி கஷ்டங்கள் காரணமாக 2015 ஆகஸ்ட் இல் ஹோட்டலின் நிர்மாணத்தினை இடைநிறுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. நிதிக்கூற்றுக்களின் திகதியில் உள்ளவாறு கம்பனியின் செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு சாத்தியமான ஏதேனும் தேர்வுகளினை கண்டறிவதற்குகூட கம்பனி தவறியிருந்தது. 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கென்வின் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் இல் அதன் பங்குகளில் முதலீடு செய்துள்ள அவர்களின் விகிதாசாரத்தில் அதன் பங்குதாரர்களுக்கு கம்பனியின் பங்குகளினை மாற்றுவதற்கு பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு அதன் அறிவுறுத்தல்களினை வழங்கியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் ஐந்தொகை திகதியில் உள்ளவாறு அது இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 113 ஆம் பிரிவின் பிரகாரம், 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கு உரிய திகதிகளின் சுய மதிப்பீட்டு வருமான வரி செலுத்துகைகள் காலாண்டு ரீதியில் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

---

### 3.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 250,594,708 வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில், ரூபா 81,700,143 வரிக்கு முன்னரான இலாபத்தினை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 168,894,565 அல்லது 67 சதவீத பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 11,572,406 இனால் நிர்வாகச் செலவினங்கள் குறைவடைந்திருந்த போதிலும், ஏனைய வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா 141,620,822 மற்றும் ரூபா 39,566,149 இனால் குறைவடைந்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3.2 கம்பனியின் நிதி நிலமை

கம்பனியின் மொத்த நடைமுறை சொத்துக்கள் 89 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த உரிமை மூலதனம் 85 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதன் விளைவொன்றாக ரூபா 3,500 மில்லியன் தொகையான நிதிகள் துணைக்கம்பனியான சினோலங்கா ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் இற்கு விடுவிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 ர்யலவவ சுநபநஉெல ர்யஅடியவெழவய ஹோட்டல் செயற்திட்டத்தின் நிர்மாணம்

ஹெலன்கோ ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் நோக்கங்களினை அடைந்து கொள்வதில், பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், ஹம்பாந்தோட்டையில் ஹோட்டல் செயற்திட்டமொன்றை நிர்மாணிக்க 2011 திசெம்பர் 21 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது. Hyatt Regency ஹம்பாந்தோட்டை ஹோட்டலில் ரூபா 4 பில்லியன் தொகையொன்றை முதலீடு செய்வதற்கு எவ்வித அமைச்சரவையின் அங்கீகாரமும் காணப்படாததுடன் 2015 மார்ச் இற்கு முன்னர் இடம்பெற்ற ஆரம்ப நிர்வாக செயன்முறைகள் பற்றிய சபைக் கூட்டங்கள் தொடர்பில் எவ்வித ஆவணரீதியான சான்றும் காணப்படவில்லை.

(ஆ) அனைத்து முன்னைய பணிப்பாளர்களும் 2015 சனவரி 20 இல் ராஜினாமாச் செய்திருந்ததுடன் புதிய பணிப்பாளர் சபையொன்று 2015 பெப்ரவரி 26 இல் நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, 6 நாட்களுக்கு பணிப்பாளர் சபையொன்று இன்றி கம்பனி செயற்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் நிதி சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட ஹோட்டல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 6,872,000,000 ஆகக் காணப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட செயற்திட்ட கிரயத்தின் 58 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,000,000,000 ஆரம்ப முதலீடாக மேற்கொள்ளப்பட்டதுடன், 36 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பிடப்பட்ட செயற்திட்ட கிரயத்தின் 42 சதவீத மீதி நிதியளிப்பு தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதற்கு ஆதரவளிப்பது எவ்வாறு என்ற எவ்வித ஆவணரீதியான சான்றும் காணப்படவில்லை.

(ஈ) காணிக்கொள்வனவு மற்றும் ஆரம்ப அபிவிருத்தி கிரயங்களுக்கு ரூபா 177,974,935 மற்றும் ரூபா 111,103,548 தொகையொன்று ஏற்பட்ட பின்னர் நிதிப் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. மிகுதி நிதிகள் அமைச்சரவை நிர்மாணமொன்றின் பிரகாரம் 2015 யூன் இல் Grant Hyatt Colombo Hotel Project இன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிர்மாணத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் நிர்வாகச் செலவினங்களுக்கு ரூபா 7,354,115 தொகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2015 ஆகஸ்ட் இல் செயற்திட்டத்தின் அபிவிருத்தி செய்முறைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும், 2017 யூலை 26 ஆந் திகதிய HLHS/2017/08 ஆம் இலக்க சபை பத்திரத்தின் பிரகாரம் நிதிக்கடமைகளினை எதிர்கொள்வதற்கான சராசரி மாதாந்த நிதிகளின் தேவைப்பாடு ரூபா 250,000 ஆக மதிப்பிடப்பட்டது. செயற்திட்டத்தின் அபிவிருத்தி

செயன்முறைகளின்றி முதலீடுசெய்யப்பட்ட நிதிகள் வெளிப்பாய்ச்சலடைந்த இந்த செலவினங்களினை சிக்கனமற்ற நிதிகளாக கருதமுடியும்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 99 - வருட குத்தகை வாடகை உடன்படிக்கையின் கீழ் ரூபா 177,974,935 கிரயமொன்றில் அண்ணளவாக 09 ஏக்கர் காணியைக் கொள்வனவுசெய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணங்கியிருந்தது.

(i) மேற்குறித்த உடன்படிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், VAT, NBT மற்றும் தொடர்புடைய வரிகள் உள்ளடங்கலாக, ஒவ்வொரு வருடமும் மார்ச் 10 இல் அல்லது அதற்கு முன்னர் ரூபா 50,000 வருடாந்த பெயரளவுப் பெறுமதியுடைய வாடகை செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், உடன்படிக்கையின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் பணத்தின் காலப்பெறுமதிக்கு எதிர்கால காசுப் பாய்ச்சலுக்கான கழிவிற்கு கவனத்தைச் செலுத்தியிருக்காது ரூபா 4,950,000 தொகை 99 வருடங்களுக்கான வருடாந்த நில வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்குறித்த உடன்படிக்கையின் பிரகாரம், ஹோட்டலின் நிர்மாணங்கள் 36 மாதங்கள் என்ற நிர்ணயித்த கால சட்டகத்திற்குள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி குறித்த தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு தவறியிருந்தது. அதற்கமைய, காணி அபிவிருத்தி செய்யப்படாமை காரணமாக மேற்குறித்த குத்தகை உடன்படிக்கையினை ரத்துச் செய்வதற்கு 2016 நவம்பர் 16 இல் கடிதமொன்றை நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுப்பியிருந்ததுடன் நிறுவகம் 2017 ஏப்ரல் 01 இலிருந்து அமுலுக்குவரும் வரை 2020 மார்ச் 31 வரை காலப்பகுதியினை திருத்தியமைப்பதற்கு 2016 நவம்பர் 24 இல் யூடீஏ இனை கோரியிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியான 2018 மே 03 ஆந் திகதி வரை நிர்மாணத்தினை ஆரம்பிப்பதற்கு எவ்வித சாத்தியமான முன்மொழிவுகளும் அங்கு காணப்படவில்லை.

(ஆ) நிதி அமைச்சிற்கு வாகனமொன்றை வாடகைக்கு விட்டது தொடர்பில் பெறவேண்டிய வாகன வாடகை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,650,000 தொகையொன்று மீதிகொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 யூன் 16 ஆந் திகதிய கிடைக்கக்கூடிய வாடகை உடன்படிக்கை நிதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவரினால் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 100,000 ஆகக் காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்ட குறித்த வருமானத்தை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஒக்தோபர் 13 இல் Jaysons Reality (Pvt) Ltd. என்ற பெயருடைய தனியார் கம்பனியொன்றுக்கு வங்கி வரைபினூடாக ரூபா 40,000,000 மற்றும் 8,000,000 தொகையொன்று மாற்றப்பட்டிருந்தது. செலுத்துகை உறுதிச்சீட்டின் விளம்பலின் பிரகாரம், Nilyan Hotels & Spa (Pvt) Ltd இன் சார்பில் ஆதனமொன்றின் கொள்வனவுக்கு முற்பன செலுத்துகையொன்றாக பணம் மாற்றப்பட்டிருந்தது. Nilyan Hotels & Spa (Pvt) Ltd. இன் சார்பில் எவ்வித ஆதனமும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், பணம் கம்பனியின் கொமர்ஷியல் வங்கிக் கணக்கிற்கு ரூபா 40,000,000 இற்கு 2014 திசெம்பர் 16 ஆந் திகதிய HSBC காசோலை மற்றும் ரூபா 8,000,000 இற்கு 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய HSBC காசோலையொன்றினூடாக மீண்டும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆவணரீதியான சான்று காணப்படாமையின் காரணமாக மேற்குறித்த கொடுக்கல்வாங்கலின் கருப்பொருள் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வுக் குழு

கம்பனியின் விவகாரங்களினை கவனிப்பதற்கு மீளாய்வாண்டின் போது தாய்க் கம்பனியினால் இரண்டு கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் |
|---|---|---|
| (i) | நாளேட்டுப் பதிவுகளினை பதிவு செய்தல் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 111,103,548 தொகையான மூலதன நடைமுறை வேலைகளின் நட்டக்கழிவிற்கான ஏற்பாடுகள், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.<br><br>பேரேட்டுக் கணக்குகளுக்கு நாளேட்டுப் பதிவுகளினைப் பதிவுசெய்வதற்கு முன்னர் நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | செலுத்துகை நடைமுறை | நாளேட்டுப் பதிவுகளுக்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கணக்கீட்டு முறைமைக்குள் பதியப்படுகின்றமை.<br><br>செலுத்துகை உறுதிச்சீட்டுக்களுக்கு தன்னியக்க தொடர் இலக்கமொன்றினை உருவாக்கும் |

வசதியினை முறைமை கொண்டிருக்காமை.